செ.வெ.எண்.682 நாள். 19.8.2008

தமிழ்நாடு மாநில எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் பொதுக் குழுக் கூட்டம், இன்று (18.8.2008) காலை, சென்னை—தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கு.பிச்சாண்டி, திரு குத்தாலம் க.அன்பழகன், திருமதி சங்கரி நாராயணன், திரு சி.கோவிந்தசாமி, மதுரை மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு பெ.அசோக் குமார், தலைமைச் செயலர் திரு எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., சிறப்பு தலைமைச் செயலர் திரு கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., முதன்மை கல்வித் துறைச் செயலர் திரு ம.குற்றாலிங்கம், இ.ஆ.ப., மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் இணைச் செயலாளரும் தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணைய இயக்குநர் திருமதி அனிதா கவுல், இந்திய அரசின் வயது வந்தோர் கல்வித் துறையின் இயக்குநர், திருமதி அனுராதா மால், இந்திய அரசின் வயது வந்தோர் கல்வித் துறை இயக்குநரகத்தின் இணை இயக்குநர் திரு ராஜசேகர், சென்னை வானொலி நிலைய உதவி இயக்குநர் திரு என்.சி.ஞானபிரகாசம், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் எம்.பொன்ன வைக்கோ, பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர் திருமதி ம.இலட்சுமி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில், எழுத்தறிவுத் திட்டத்தின் முதற்கட்டமாக முழு எழுத்தறிவு இயக்கம், இரண்டாம் கட்டமாகிய தொடர் கல்வித் திட்டம் நிறைவு பெற்றவுடன், மூன்றாம் கட்டமாகிய வளர்கல்வித் திட்டம் ஆகியவை சம்பபந்தபட்ட மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட எழுத்தறிவுக் குழுமத்தால் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த முதல் மூன்று ஆண்டுகளுக்கு மைய அரசால் முழு (100%) நிதியுதவி வழங்கப்படுகிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மைய, மாநில அரசுகளால் 50 : 50 என்ற நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தற்போது, இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களில் 14,107 மையங்களில் 59,91,141 பேர்கள் பயன்பெறுகின்றனர். மாநில நிதி உதவியுடன் மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தின் மூலம் 5,86,833 பேர்கள் எழுத்தறிவு பெற்றுள்ளனர். விடுபட்டடோருக்கான எழுத்தறிவுத் திட்டத்தில் 7,90,000 பேர்கள் பயன்பெற்று வருகின்றனர். வளர்கல்வித் திட்டத்தில் சிறை இல்லவாசிகளுக்கு எழுத்தறிவு மற்றும் தொழிற்பயிற்சிகள் அளிப்பதன்மூலம் 2792 பேர் பயனடைந்து வருகின்றனர். 13,654 பஞ்சாயத்து தலைவர்களுக்கு இத்திட்ட செயல்பாடுகள் குறித்த் பயிற்சி செயற்கைகோள் வழியாக அளிக்கப்பட்டது. தற்போது 31 மாவட்டங்களிலும் செயல்வழிக்கற்றல் முறையில் (Activity Based Learning) வளர்கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் சமநிலைக் கல்வித் திட்டம், தனிநபர் விருப்ப மேம்பாட்டுத் திட்டம், வருவாய் பெருக்குத் திட்டம், வாழ்க்கைத்தர மேம்பாட்டுத் திட்டம் ஆகிய 4 செயல்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றில் 2,95,952 பேர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இக்கூட்டத்தில் தமிழகத்தில் முழு எழுத்தறிவுத் திட்ட செயல்பாடுகள் குறித்த நடைமுறை தொடர்பான அறிக்கையும், தொடர்கல்வி திட்ட நடைமுறை அறிக்கையையும், வளர் கல்வித் திட்டம் சார்ந்த நடைமுறை அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. வயதுவந்தோர் கல்வி மையங்கள் அமைக்கும்போது இயன்றளவில் பள்ளிசார்ந்த இடங்களில் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும், எங்கெல்லாம் தொண்டு நிறுவனங்கள் முன் வருகின்றனவோ அங்கெல்லாம் அவை ஈடுபடுத்திக் கொள்ளலாம் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

1)15 வயது முதல் 35 வயது வரையிலான கல்லாதோர்களை கல்வி அறிவு பெறச் செய்தல். 2)கற்போர் தங்கள் கற்ற கல்வியை அன்றாட வாழ்கையில் பயன்படுத்தி சுய மேம்பாடு அடைய வழிகாட்டுதல். 3) பின் தங்கிய மற்றும் நலிந்த பிரிவினரைப் பங்கேற்கச் செய்தல். 4)வளர்ச்சித் திட்டங்களை மக்கள் புரிந்து கொண்டு அதில் பங்கேற்கவும் வழி வகை செய்தல். 5) குறுகியகால தொழிற்பயிற்சிகள், தொழில் முன்னேற்றப் பயிற்சிகளை அளித்தல். 6) மக்கள் பங்கேற்புடன் கலை – கலாச்சார நிகழ்ச்சிகளையும்,

விளையாட்டுகளையும் அமைத்து நடத்துதல். 7) சமுதாயப் பிரச்சனைகளில் பங்கேற்றல். 8) தேசிய ஒருமைப்பாடு, சிறு குடும்பநெறி, சுற்றுப்புற பாதுகாப்பு, ஆண்–பெண் சமம் போன்ற கருத்துகளில் விழிப்புணர்வு அடையச் செய்தல் மேற்படி திட்டங்கள் மூலமாக புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் தங்கள் பெற்ற எழுத்தறிவை நிலை நிறுத்திக் கொள்ளும் வகையில் வளர்கல்வி மையங்களில் நூலகங்கள் அமைக்கப்படுதல் ; ஆகிய வளர்கல்வித் திட்டங்களின் நோக்கங்கள் குறித்தும், அவைகளை மேம்படுத்துதல் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் இணைச் செயலாளரும் தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணைய இயக்குநர் திருமதி அனிதா கவுல் அவர்கள், வளர்கல்வித் திட்டம் தமிழகத்தில் தற்போது நல்லமுறையில் செயல்பட்டுவருவதாக தெரிவித்தார்.

இத்திட்டம், தமிழ்நாட்டில், எழுத்தறிவுத் திட்டத்தின் முதற்கட்டமாக முழு எழுத்தறிவு இயக்கம், இரண்டாம் கட்டமாகிய தொடர் கல்வித் திட்டம் நிறைவு பெற்றவுடன், மூன்றாம் கட்டமாகிய வளர்கல்வித் திட்டம் ஆகியவை சம்பபந்தபட்ட மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட எழுத்தறிவுக் குழுமத்தால் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

வெளியீடு : **இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**